# விவாதப் பொருளாகலாமா நீதிபதிகளின் கருத்துகள்?

சில நீதிபதிகள் அரசியல், மத சம்பந்தப்பட்ட சில வழக்குகளில் எழுப்பியுள்ள கேள்விகள், அளித்துள்ள தீர்ப்புகள்; இன்று, வெட்ட வெளியில் பகிரங்கமாக விமர்சிக்கப்படும் நிலையை உருவாக்கியுள்ளது!

பொதுவாக நீதிமன்றங்களின் தீர்ப்புகளோ, நீதிபதிகளின் கருத்துகளோ வீதியில் பேச்சுப் பொருளாவதில்லை! அந்த அளவு நமது நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தில் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நின்று நீதிமன்றத்தின் புனிதத்தைக் காத்து வந்திருக்கிறார்கள்!

**நீதிபதியாவதற்குமுன் அரசியல் கட்சிகளின் கொள்கைகளில் ஈர்ப்புடையவர்களாக இருந்த சிலர், ஏன்; இன்னும் ஒரு படி மேலே சென்று சொல்ல வேண்டுமானால், அரசியல் கட்சியில் உறுப்பினராக இருந்து செயல்பட்டவர்கள்கூட; நீதிபதிகளானபின், தாங்கள் முன்பு கொண்டிருந்த கொள்கைக்கு எதிராக இருப்பினும், தங்கள் பதவிக் காலத்தில் சட்டத்திற்குட்பட்டே தீர்ப்புகள் வழங்கி நீதிமன்றத்தின் மாண்புக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.**

அத்தகைய பெருமைமிகு நீதிபதிகள் எந்தவித அழுத்தத்துக்கும் அடிபணியாது கடமையாற்றி, மன்றத்தின் கண்ணியத்தைக் காத்து நின்றதற்கு பல உதாரணங்கள் உண்டு!

**ஆனால் சமீபகாலமாக நீதிமன்றங்களில் சில நீதிபதிகளின் போக்கு, நீதிமன்றத்தில் தங்கள் முன் உள்ள வழக்குக்குத் தொடர்பின்றி அவர்கள் தெரிவிக்கும் கருத்துகள், சக நீதிபதிகள், கீழமை நீதிமன்ற நீதிபதிகள் தந்த தீர்ப்பு குறித்து சந்தேகங்கள் எழுப்புவது போன்றவை இன்று சமூக வலைதளங்களில் விமர்சிக்கப்படும் நிலையினை உருவாக்கி உள்ளது.**

**அத்தகைய விமர்சனங்களுக்கு வாதப் பிரதிவாதங்கள் நடத்தப்படுவது, நீதித்துறையின் மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பை சுக்கு நூறாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்காக நாம் அந்த வாதப் பிரதி வாதங்களை நடத்திக் கொண்டிருப்போரை மட்டும் குறை கூற முடியாது; நீதி மன்றங்கள் மீது அவர்கள் கொண்டிருந்த மரியாதை கலந்த பயத்தை உடைத்தெறியும் வகையில் சில நீதிபதிகள் நடந்துகொள்ளும் போதும், வழக்குக்குள் நின்று கருத்து தெரிவிக்காது. வழக்குக்கு வெளியே சென்று கருத்துகள் கூறும் போதும் இத்தகைய எதிர்க் கருத்துகள் உலாவரத் தொடங்குகின்றன!**



நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் தங்கள் வாதங்களை எந்த ஒரு வழக்கிலும் எடுத்து வைக்கும் போது, அவர்களுக்கு வகுக்கப்பட்ட உரிய எல்லைக்குள் நின்று வாதிடுகின்றனர்! நீதிபதியின்முன் பல வழக்குகளை எடுத்துச் செல்ல வேண்டிய நிலையில் அவரை அடுத்தடுத்து சந்திக்க வேண்டி வருவதால் சில நீதிபதிகள் வழக்குக்கு வெளியே சென்று கூறிடும் கருத்துகளுக்கு உரிய மறுப்பிருந்தும் அதனைத் தெரிவிக்காது வழக்கறிஞர்கள் அமைதி காத்து விடுவது இயற்கையே! ஆனால் மக்கள் மன்றம் அப்படி இல்லை.

ஒரிருவர் நீதிபதியையோ, தீர்ப்பையோ விமர்சித்தால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்து அவரது செயலுக்குத் தண்டனை வழங்கலாம்! இது சமூக ஊடகங்கள் புற்றீசல்களாகத் தோன்றியுள்ள காலம்! இதனை நீதிபதிகளும் அறிவர்: இந்த நிலையில் நீதிபதியின் கருத்து குறித்து வாதப் பிரதிவாதங்கள் ஆயிரக்கணக்கில் தொடங்கி விடும்போது, ஒவ்வொருவரையும் கண்டுபிடித்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர நினைத்தால், நீதிமன்றங்கள் அந்த வழக்குகளைத் தவிர வேறு வழக்கை நடத்திட முடியாது என்பதை உணர்ந்திட வேண்டும்!

**நீதிபதிகள் சிலருக்கு தங்களுக்கென்று தனிப்பட்ட கொள்கைகள் இருக்கலாம்; சில விருப்பு, வெறுப்புகள் இருக்கலாம்; நீதிமன்றத்தின் படி ஏறி, தங்களுக்கான இருக்கைக்குச் செல்லும் போது, தாங்கள் சட்டத்தின் காவலர்கள்; நேர்மையின் காரணிகள்; நியாயத்தின் காப்பாளர்கள் என்ற உணர்வுகளோடு மட்டுமே சென்றிட வேண்டும்.**

'ஒருவரை அமைச்சராக நியமிப்பதும் நீக்குவதும் முதலமைச்சருக்கு உள்ள உரிமை' என்று உச்சநீதிமன்றமேதீர்ப்பளித்துள்ள நிலையில், உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர், 'ஒரு அமைச்சர் 230 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தும் அவர் அமைச்சராக நீடிக்க அனுமதிப்பதன் மூலம் மக்களுக்கு என்ன செய்தி சொல்ல விரும்புகிறீர்கள்?' என்று நீதிமன்றத்தில் கேட்டுள்ளார்!

நீதிபதியின் பார்வையில் அவர் கருத்து நியாயமானதுதான்!

**ஆனால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில், தண்டனை பெற்று அவர் 230 நாட்கள் சிறையில் இருந்திருந்து அமைச்சர் பதவியிலிருந்திருந்தால், நீதிபதி கேட்ட கேள்வியை மக்களே கேட்டிருப்பார்கள்!**

**இன்றைய சூழ்நிலையில் பல வழக்குகளில் ஜாமின் வழங்க நீதிபதிகள் மறுத்து, குற்றம் சாட்டப்பட்டவரை பல மாதங்கள் சிறைவாசம் அனுபவிக்க வைத்திடும் நிலை; பொதுமக்கள் மட்டுமின்றி, முன்னாள் - இந்நாள் உச்சநீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டாலும் பல நீதிபதிகள் அதனைக் கருத்தில் எடுத்துக் கொள்வதில்லை!**

ஆம் ஆத்மி தலைவர், டெல்லி முன்னாள் துணை முதல்வர் சிசோடியாவுக்கு ஓராண்டுக்கு மேலாகியும் நீதிமன்றம் ஜாமின் வழங்காதது குறித்து சமீபத்தில் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி மதன் பி.லோகூர் (Madan B Lokur). கருத்தறிவிக்கையில்,



**சிலந்தி**

**"ஜாமின் வழங்குவது அல்லது மறுப்பதற்கான அடிப்படைக் கொள்கைகளை நீதிமன்றங்கள் மறந்து விட்டதாகத் தெரிகிறது; ("Courts seem to have forgotten the basic Principle of grant of refusal of bail")**


**முதலில் போலிஸ் கைது செய்கிறது. பின்னர் விசாரணையைத் தொடங்குகிறது. விசாரணை அமைப்புகளின் வடிவமைப்புகளை நீதித்துறை பார்க்க விரும்பாதது மிகவும் துரதிருஷ்டமானது. சட்டப் புத்தகங்கள் முழுக் கதைகளையும் கூறாது. நீதித்துறை வாழ்க்கையின் உண்மை நிலைகளுக்கு ஏற்ப விழித்தெழ வேண்டிய தேவை உள்ளது.**

("The Police first arrest the person, then start a serious investigation. An incomplete chargesheet is filed followed by supplementary chargesheet and documents are not furnished. This is most unfortunate and what is troubling is that some courts are not willing to see through this.

The judiciary needs to wake up to the realities of life as law books do not tell the whole story")

- முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி தெரிவித்த இந்தக் கருத்துகளின் ஆழம் இன்று; நீதிமன்றங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாக அமைந்து விட்டது!

ஜாமின் வழங்குவதில் நீதிமன்றங்கள், பலதரப்பட்ட முறைகளைப் பின்பற்றுவதும், ஒருசில வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களுக்கு இரவோடு இரவாகவே ஜாமின் வழங்குவதும், அதேபோன்ற சில வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களுக்கு மாதக்கணக்கில், ஆண்டுக் கணக்கில் ஜாமின் வழங்காது இழுத்தடிப்பதும், அதுகுறித்து வலைதளங்களில் பல்வேறு கருத்துகள் பகிரப்படுவதும், சில நீதிபதிகளின் நேர்மைத் தன்மையை சந்தேகத்துக்குள்ளாக்குவதும் தொடர்வது நல்லதல்ல!



**மதன் பி.லோகூர்**
உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு)

'சட்டம் ஒரு இருட்டறை... அதில் வக்கீலின் வாதம் விளக்கு' என்றார் அண்ணா. இன்றைய நிலையில், ஒரு வழக்கறிஞரைச் சந்தித்தபோது, அவர் தெரிவித்த கருத்துகள் நம்மை அதிர வைப்பதாகவே உள்ளது!

"என்ன சார்; நாளைய வழக்குக்கு வாதம் செய்ய படித்துத் தயாராகி விட்டீர்களா?" என்றால்;

**"வாதத்தைக் கேட்டு தீர்ப்பு வழங்குவது என்ற நிலை குறைந்து வருகிறது. சில அழுத்தங்கள், (சாதிய, அரசியல்) காரணமாக சில நீதிபதிகள் தீர்ப்பை முடிவு செய்துவிட்டு வழக்கை விசாரிக்கும் நிலையில் நாம் என்ன வாதிட்டு என்ன பயன்? முன் ஆதாரங்களை (Precedent) தேடித் தேடிப் படித்து எடுத்துரைத்தாலும், முடிவு ஒன்றுதான். அது முன்னுதாரணங்களை ஆய்ந்து தெரிவித்த முடிவாக இருப்பதில்லை; பின் அழுத்தங்கள் விளைவாக எழுந்ததாகவே இருக்கிறது!"** என வேதனையோடு குறிப்பிட்டார்!

இப்போது ஒரு சில நீதிமன்றங்களில் நடைபெறும் இத்தகைய நிகழ்வுகள் தொடர்கதையானால் என்ன ஆவது?

**"மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமானால் எங்கே போய் மூழ்குவது?"**

மக்கள்முன் எழத் தொடங்கியுள்ள இந்த எண்ணம் பரவாது தடுக்க; உரியவர்கள் முன்வருவார்களா?

---